பக்கங்கள் 15

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 07 சனிக்கிழமை 21.01.2024 அதிர்வு 174



# தமிழரசின் தலைவராக சிறீதரன் எம்.பி. தெரிவு

## நாங்கள் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம் என்கிறார் சுமந்திரன்



– சீ.ஏ. தமிழ்மாறன் –

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்டிருந்தனர்.

தலைமைப் பதவிக்குப் போட்டி நிலவியதால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்வு நடத்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன்படி புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காகத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை இன்று திருகோணமலை நகர சபை மண்டபத்தில் கூடியது.

இதன்போது நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பின் முடிவுகளுக்கமைய சிறிதரன் எம்.பி. 186 வாக்குகளையும், சுமந்திரன் எம்.பி. 137 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

மற்றுமொரு வேட்பாளரான முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன், சிறிதரன் எம்.பிக்கு ஆதரவு வழங்கினார்.

இதன் அடிப்படையில் 49 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுக்கொண்ட சிறிதரன் எம்.பி. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

04 ▸

# திருமலையில் வெற்றிக் கொண்டாட்டம்











இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காகத் திருகோணமலையில் இன்று நடைபெற்ற தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரன்வெற்றி பெற்றார். அதன்பின்னர் அவரின் ஆதரவாளர்கள் அங்கு வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.





04▶

# வடக்குக்கு இந்தியா தொடர்ந்தும் உதவும்

## ஆளுநரிடம் தூதுவர் உறுதி



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேரில் சந்தித்துக் கலந்துரையாடி னார்.

கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன் னெடுக்கப்படும் நல்லிணைக் கச் செயற்பாடுகள், அபிவிருத் தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது ஆளுநரால் இந்தியத் தூது வருக்குத் தெளிவுபடுத்தப் பட்டது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி புரியும் எனத் தெரிவித்த தூதுவர், விசேடமாக வடக்கு மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் உறுதி யளித்தார்.

## செம்மணியில் ஓட்டோ விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் சாவு!




யாழ்ப்பாணத்தில் ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கைதடி மேற்குப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய வேலுப்பிள்ளை அமல்ராஜ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி மேற்படி நபர் ஓட்டோவில், அவரது தாய், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் உற வினரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண் டிருந்தார்.

இதன்போது செம்மணி சந்திப் பகுதியில் நாய் குறுக்கே பாய்ந்ததால் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் (19) மாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கதிரையில் அமர்ந்திருந்தவாறு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு



வீட்டில் கதிரையில் உட்கார்ந்திருந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பாசையூர் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் யாக்கோ லின் குலசிங்கம் (வயது 46) என்ற என்ற மூன்று பிள்ளை களின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்றுக் காலை கதிரையில் அமர்ந் திருந்த நிலையில் அவரது சகோதரி அவரை எழுப்ப முற்பட்டவேளை அவர் உயிரிழந்து காணப்பட்டுள் ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஊஞ்சல் கயிறு இறுகி 10 வயது சிறுவன் பலி

## செம்மலையில் சோகம்



ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவர், ஊஞ்சல் கயிறு கழுத்தில் இறுகியதில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, செம்மலைப் பகுதியில் நேற்று மாலை இந்தச் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் முல்லைத்தீவு வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டாலும், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் முன்னரே அவர் உயிரிழந்து விட்டார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

பிரசாத் டனிஷ் என்ற 10 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தமிழரசின் தலைவராக...

தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் தலைவர் ஒருவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர் தெரிவு நடைபெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சுமந்திரன் எம்.பி.,

“தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் மிகவும் ஆரோக்கியமாக எமது கட்சி, ஒரு உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் முன்மாதிரியாக நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற எனது நண்பன் சிறீதரனுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் இருவரும் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம். எங்களுடைய தலைவர் அண்ணன் மாவை சேனாதிராஜா இத்தனை காலமும் வழிநடத்திய தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு இப்போது சிறிதரனின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. இது மிகவும் சந்தோஷமான விடயம். கட்சியின் பயணத்தில் நாங்கள் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம்.” – என்றார்.





# பெரும்போக அறுவடை நஷ்டம்; திருமலை விவசாயிகள் கவலை!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது பெரும் போக அறுவடை ஆரம்பித்த நிலையில் விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

பெரும் போக அறுவடையின் போது இரண்டு விடயங்களால் பாரிய நஷ்டத்தை எதிர்கொண்டனர் என்று விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விதைப்பு காலத்தில் உரிய நேரத்தில் மானிய பசளைக்கான பணம் கிடைக்க வில்லை என்றும் இதனால் உரியவாறு பயிர் வளரவில்லை என்றும் இதனால் விளைச்சல் குறைந்திருந்தது.

இந்த நிலையில் பயிர் கதிர்விடும் காலங்களில் அதிக மழை பெய்து வெள் ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக விளைச்சல் குன்றியுள்ளது. வெள்ளம் காரணமாக நெற் பயிர்கள் அதிகம் வெள்ளத்தில் மூழ்கியதாலும் விளைச் சல் குறைந்துள்ளது.

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் பூவரசன் தீவு, சமாவச்சந்தீவு ஆகிய பகுதிகளில் பெரும்போக அறுவடை தற்போது நடைபெற்று வருகின்றது.

இவர்கள் கடந்த காலங்களில் கடன் பட்டு நகை அடகு வைத்து வேளாண்மை செய்த போதும் அதற்கான உரிய பலன் கிட்டவில்லை என்று கவலை தெரிவிக் கின்றனர்.

ஒரு ஏக்கருக்கு 30 வீத அளவே விளைச்சல் தற்போது கிடைத்து வரு கிறது. வெட்டுக்கூலி அதற்கும் மேல் உள்ள நிலையில் தாம் பெரும் சிரமங் களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். தங்களுக்கு பாதிப் புக்கு அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சம்மாந்துறை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீரின் தனிப்பட்ட நிதியின் மூலம் நாபீர் பவுண்டேஷனின் சம்மாந்துறை 7 ஆம் வட்டார அமைப்பாளர் எப்.ஏ. றசூல் தலைமையில் அந்த வட்டாரத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ் வில் நாபீர் பவுண்டேஷனின் மத்திய குழு செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.எம்.பஸ்லின் கலந்து கொண்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முடிந்த தேர்தல் திருவிழா

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் எம்.பி. தேர்வாகி இருக்கின்றார்.

அவருடன் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இந்தத் தேர்தலில் தமது தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கின்றமை மட்டுமல்ல, சிறீதரனின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து, அவருடன் சேர்ந்து உழைப்பார் என்றும் அறிவித்திருக்கின்றார்.

அது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எனினும் உள்கட்சித் தேர்தலை - பல வெளித் தலையீடுகள் இருந்த போதிலும் - அதற்கான முறைமையோடு அணுகிய இரண்டு பிரதான வேட்பாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்தான்.

பெரிய குழப்பம் ஏதும் இன்றி இந்தத் தேர்தலை நடத்தி முடிப்பதில் இருவருமே - சிறீதரன், சுமந்திரன் இருவருமே - காட்டிய நேர்மையான ஈடுபாடு ஏனைய தரப்பினருக்கு நல்ல முன்மாதிரி என்பதை மறுப்பதற்கு இல்லை.

காலங்காலமாக ஒரு தலைவரின் சொத்து என்பது போலவும், கட்சி குடும்பத்தின் முதுசம் என்பது போலவும் தமிழ்க் கட்சிகள் நடந்து வருகையில், அவற்றினின்றும் மாறுபட்டு, உட்கட்சி ஜனநாயகத்தை வெளிப்படுத்திய இந்தத் தேர்தல் இலங்கையின் அரசியல் கட்சி முறைமைகளுக்கு ஒரு முன்மாதிரி. இப்படி ஜனநாயக முறைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆரோக்கியமான வாய்ப்புகள் இருந்தும், கடந்த பத்து ஆண்டுகளாக அதைச் செய்யாமல் விட்ட பழைய தலைமுறைக்கும் இது நல்லதோர் படிப்பினை என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

தமிழரசு கட்சியின் இந்த உள்வீட்டுத் தேர்தலை ஒட்டி வெளியே தெரியாமல் - வெளிச்சக்திகள் பலவற்றின் நேரடி தலையீடுகள் அதிகம் இருந்தமை பரகசியமான விடயம்.

அதற்கு இடமளித்தவர்களே அதைச் சமாளித்து, இனிமேல் கட்சியின் தனித்துவத்தைப் பேணி அதைக் கொண்டு நடத்துவது என்பது இமாலயப் பணியாகத்தான் இருக்கப் போகின்றது.

இந்தத் தேர்தலை ஒட்டி அதிகம் பேசுபொருளான விடயம் 'தமிழ் தேசியம்'. அதை முன்னிறுத்திக் கட்சிச் செயற்பாடுகளை முன்னெடுப்பது - கட்சியின் நலனை மட்டுமல்லாமல் தமிழர்களின் எதிர்கால நலனையும் கூட முற்கொண்டு செல்வது - இலேசுப்பட்ட காரியம் அல்ல.

எது, எப்படி என்றாலும் புதுடில்லியிலும் ஒரு பிரசார அலுவலகத்தைத் திறந்து, இந்தியாவுடன் அதிகம் ஊடாடி, தமிழ் தேசியத்தை நிலை நிறுத்தி, கட்சியை உறுதியாக முன்னெடுத்துச் செல்வேன் என்று உறுதியளித்த ஸ்ரீதரனின் கைகளில் கட்சியை ஒப்படைப்பதற்கு தமிழரசு கட்சியின் கிளைகளின் பிரதிநிதிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

இந்த விடயங்களை முன்நகர்த்துவது சிறீதரன் எம்.பிக்கு இலகுவாக இருக்கப் போவதில்லை. சவாலான பணியாக இருக்கும்.

தம்மைத் தவிர தமிழ் தேசியத்துடனும் புலிகளுடனும் இணைந்து செயலபட்டவர்கள் யாரும் இல்லை என்று மற்றவர்களின் கடந்த காலப் பணிகளைக் கொச்சைப்படுத்த வேண்டிய தேவை இனி அவருக்கு இல்லை. ஆகவே அவர் சுதந்திரமாக முன்னேறிச் செயற்படலாம்.

மறுபுறத்தில், விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டப் பாதையை நான் அங்கீகரிக்கவில்லை என்ற சுமந்திரனின் சிந்தனைப் போக்கை - நிலைப்பாட்டை - தமிழரசு கட்சியின் அடிப்படைத் தொண்டர்கள் ஏற்று அங்கீகரிக்கவில்லை என்ற யதார்த்தத்தையும், தமிழ் தேசிய அங்கி போர்த்து வந்தால் மட்டுமே தமிழரசுக் கட்சிக்குள் அவருக்கு அங்கீகாரம் கிடைக்க வாய்ப்புண்டு என்ற செய்தியும் சுமந்திரனுக்கு சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்த யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, தமது எதிர்கால அரசியல் பாதையை வகுக்க வேண்டிய கட்டாயம் கூட அவருக்கு உள்ளது.

தமிழரசுக் கட்சியின் மரபுப்படி கட்சியின் தலைமைத்துவம் ஒருவருக்கு இரண்டு தடவைகள் வழங்கப்படும் வழக்கமுண்டு. ஆகையினால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கக்கூடிய - நடத்தப்பட வேண்டிய - அடுத்த தேசிய மாநாட்டிலும் தலைவராகுவதற்குரிய வாய்ப்பும் தகுதியும் சிறீதரனுக்கு இப்போதைய வெற்றி மூலம் கிட்டியிருக்கின்றது. ஆகவே அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அவர் தலைவர் பதவியில் நீடிக்க வாய்ப்பு உள்ளது.

இப்போது அறுபது வயதை எட்டியிருக்கும் சுமந்திரனுக்கு அப்போது 64 அல்லது 65 வயதாக இருக்கும். 65 வயதில் அரசியலில் ஓய்வு பெறும் எண்ணத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கும் சுமந்திரன், இந்த பின்புலங்களை சீர்தூக்கிப் பார்த்து தனது அரசியல் பாதையை வகுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார் என்பதும் சுட்டிக் காட்டப்படத்தக்கதே.

ஆயினும் தமிழர் அரசியலைக் கலக்கிய ஒரு தேர்தல் திருவிழா முடிவுக்கு வந்திருக்கிறது. அது தீர்க்கமான சில செய்திகளையும் சொல்லியிருக்கின்றது.




# ஆஸ்திரேலியாவில் வெளியான கலாசூரி சிவகுருநாதனின் நூல்!

இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் வெளியிடப்பட்டது.

கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கென இடம் பதித்துக் கொண்டவர். அவரை கௌரவிக்கும் முகமாக ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் சிறப்புற இவ்விழா நடைபெற்றது.

கலாசூரி இ.சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' வெளியீட்டு விழா நேற்றுச் சனிக்கிழமை(20) மாலை 4.30 மணிக்கு ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெற்றது.

இலக்கிய ஆர்வலர், எழுத்தாளர்





க. திருவருள் வள்ளல் தலைமையில் கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

நூல் வெளியீட்டு விழாவில் மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி நூலை அறிமுகம் செய்தார். அதன்பின் நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனை பற்றிச் சிறப்புரை நிகழ்த்தினார்.

சிறப்பு அதிதியாக இலங்கைத் தூதர் திருமதி சித்ராங்கனி வாகிஷ்வரா நிகழ்வில் கலந்து கொண்டார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி சிறப்புரையை எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான சுந்தரதாஸ் ஆற்றினார். அதன்பின் நூலின் தொகுப்பாசிரியர் ஜங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார். அத்துடன் இளம் மாணவனான அரஜுன் விஷ்ணு 'தனது வாழ்வியல் வழிகாட்டி' எனும் பொருளில் தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரை நினைவு கூர்ந்தார்.

இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் சின்னத்துரை மயூரனின் நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெற்றது.





# இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வவுனியா பயனாளிகளுக்கு வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் வவுனியா பிரதேச பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு இரண்டு சக்கர உழவு இயந்திரங்களைக் கையளித்தார்.50 வீதம் மானிய அடிப்படையிலும் 50 வீதம் பயனாளிகளின் பங்களிப்புட னும் நான்கு பயனாளிகளுக்கு இந்த உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒஸ்கார் அமைப்பால் உலருணவு வழங்கல்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசத்தில் மிகவும் தாழ்நிலை பகுதியான பிரிவு 11 இல் வசிக்கும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு ஒஸ்கார் அமைப்பு (ஆஸ்திரேலியா – காரைதீவு மக்கள் ஒன்றியம்) நேற்று சனிக்கிழமை உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் முன்னிலையில் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஒஸ்கார் சார்பில் கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்துகொண்டு அதனை வழங்கி வைத்தார்.

ஆஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு சமூக ஆர்வலர்களின் நிதி உதவியைக் கொண்டு காரைதீவு இளைஞர்கள் அந்த மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டனர்.

கடந்த வாரம் வெள்ளத்தில் தத்தளித்த குளவெளி மக்களுக்குச் சமைத்த உணவை ஒஸ்கார் வழங்கியது.

வெள்ள அகதிகளுக்கு உலருணவை தொடர்ந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.









# அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர் சிக்கினர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத மற்றும் அதிக விலைக்கு நுகர்வோருக்கு பொருள்களை விற்பனை செய்த பலரை பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில், லாஹுகல, இறக்காமம், தமண, அம்பாறை நகரம், உகன, மகா ஓயா, பதியத்தலாவ மற்றும் தெஹியத்தக்கண்டிய ஆகிய பிரதேசங்களில் இவர்கள் இனங்காணப்பட்டனர்.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோஸ்தர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் அதிக வர்த்தகர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவ்வப் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்று அம்பாறை மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பாளர் எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.



# மூதூர் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிவைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மூதூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் புதிய ஆண்டில் பாடசாலை கல்வியை தொடரும் பாதணிகளற்ற மாணவர்களுக்கான பாதணிகள் மூதூர் அல்-ஹுசைனியா பாடசாலை அதிபர் ரிஸானா மௌஜுத் ஒழுங்கமைப்பில் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.எம்.ஷருக் தலைமையில் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மூதூர் லயன்ஸ் கழக தலைவர் ஜே.எம்.இஹ்ஷான், செயலாளர் எம்.பி.எம்.சப்ராஜ், பணிப்பாளர் எம்.பி.நாஜின், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென் கிழக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் இணையவழி ஊடாக!

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கின் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப் பட்டிருந்தன. அவை மீண்டும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் அதுவும் தற்காலிகமாக நிறுத்தப்பட் டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்றல் செயற்பாடுகளை மறு அறி வித்தல் வரை இணையவழி மூலம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் தீர்மானத் துக்கு அமைவாக, அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக இணைய வழி மூலம் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கின் காரணமாக ஏற்பட்ட சிதைவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. மறுசீரமைப்பு பணிகளும் இடம்பெற்று வருகின் றன.

இதேவேளை, சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.



# மட்டுவில் குடும்ப முன்பள்ளி ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(த.சுபேசன்)

தென்மராட்சி, மட்டுவில் குடும்ப முன்பள்ளிகளை உள்ளடக்கி மட்டுவில் குடும்ப முன்பள்ளிகளின் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக் குமாரசுவாமி தலைமையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் மட்டுவில் முன்பள்ளி குடும்பத்தின் முன்பள்ளி ஆசிரியர்கள், தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியச் செயலாளர் றொக்சன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

முன்பள்ளிக் குடும்பத்துக்குக் கலாநிதி அகிலன் முத்துக்குமார சுவாமியின் நிதிப் பங்களிப்புடன் ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டு ஊக்கு விப்பு நிதியம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் ஒன்பது முன் பள்ளிக் குடும்பங்கள் உள்ள நிலையில் சகல முன்பள்ளிக் குடும்பங்க ளுக்கும் ஒன்றியம் அமைத்து அதனூ டாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நலத் திட்டங்களை முன்னெ டுக்கவிருப்பதாக சமூக சேவகர் அகிலன் முத்துக் குமாரசுவாமி தெரிவித்துள் ளார்.

முன்பள்ளி ஆசிரியர்கள் தற் போதைய பொருளாதார நெருக்கடி காலகட்டத்திலும் மிகக் குறைந்த வேதனத்தில் அளப்பரிய கல்விச் சேவையை ஆற்றி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# முட்டையின் விலை உயர்க்கு வரி அதிகரிப்பே காரணம்

இறக்குமதி செய்யப்படும் இந்திய முட்டையின் விலை அதிகரிக்கப் படுகிறது. வரி அதிகரிப்பே இதற்கு காரணம் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் இன்று (21) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வற் வரி அதிகரிப்பு காரணமாக இறக்குமதி செய்யப்படும் இந்திய முட்டை ஒன்றின் விலை இன்று (21) முதல் 08 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இதன்படி சதொச ஊடாக 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டை 43 ரூபாவிற்கு விற்பனை செய்யப் படும்.

சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு இல்லை. எனினும் முட்டையின் விலை அதிகரித்துள்ளது.-என்றார்.



# மட்டு ஐ.சி.எஸ்.ரி. பல்கலைக்கு ரவூப் ஹக்கீம் விஜயம் செய்தார்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மட்டக்களப்பில் அமைந்துள்ள ஐ.சி.எஸ்.ரி. எனும் விஞ்ஞான, தொழில் நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக் கழகததுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று சனிக்கிழமை (20) விஜயம் செய்தார்.

பல்கலைக்கழக நிறுவுனரும் முன் னாள் ஆளுநருமான கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ்வின் அழைப் பின் பேரில் அங்கு சென்ற ரவூப் ஹக்கீம் கற்கை பிரிவுகளைப் பார்வையிட்டார். அத்துடன் கல்வி கற்கும் மாணவர்களு டனும் கலந்துரையாடினார்.

சவூதி அரேபியாவின் பாரிய நிதிப் பங்களிப்புடன் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புழ்ழாஹ்வால் நிறுவப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம், கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் 2019 ஏப்ரல் 21 அன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அரசால் கையகப்படுத்தப்பட்டு, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.கொரோனா வைரஸ் தொற்றுக் காலத்தில் கொரோனா நோயாளர் பரா மரிப்பு நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தர வின் பேரில் அங்கிருந்து இராணுவம் வெளியேறியதுடன் நிறுவுனர் ஹிஸ் புழ்ழாஹ்விடம் குறித்த பல்கலைக்கழகம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் பலத்த சேதமடைந் திருந்த பல்கலைக் கழகக் கட்டடத் தொகுதிகள், தளபாடங்கள், உபகரணங் கள் யாவும் புனரமைப்பு செய்யப்பட்டுக் கடந்த வியாழக்கிழமை (18) பல் கலைக் கழக வளாகம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு, அங்கு கல்வி நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அக்கரைப்பற்று பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

"மெஸ் லங்கா" நிறுவனத்தின் ஏற் பாட்டில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு குடும்பங்க ளின் வாழ்வாதாரங்களுக்காக தள்ளு வண்டில்கள் மற்றும் அதற்கு தேவை யான ஆரம்ப கட்ட வியாபாரத்துக்கு உரிய பொருள்களும் வழங்கி வைக் கப்பட்டன.

பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார்



தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் உதவிப் பிரதேச செயலாளர் ரா ஷீத் யெஹியா, பிரதித் திட்டப் பணிப் பாளர் ஏ.எம்.தமீம், சிரேஷ்ட திட்டமிடல் உத்தியோகத்தர் யூ.எல்.எம்.ஆகிர், நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஹசன் சியாத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பில் நடந்த பொங்கல் விழா!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாநகரசபை பொது நூலகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பண்பாட்டு அலுவலகம் என்பன இணைந்து நடத்திய காணும் பொங்கல் விழா மட்டக்களப்பு காந்திப்பூங்கா வளாகத்தில் நேற்று சனிக்கிழமை (20) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டப் பண்பாட்டலுவலகத்தின் இணைப்பாளர் தங்கராசா மலர்ச்செல்வன் மற்றும் மட்டக்களப்பு பொதுநூலகப் பிரதம நூலகர் த.சிவராணி ஆகியோரின் இணைத் தலைமையில் பொங்கல் நடைபெற்றது.

பொங்கல் விழாவில், மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் எந்திரி ந.சிவலிங்கம், கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் முதன்மை அதிதிகளாகவும், மட்டக்களப்பு மாநகரசபை பொறியியலாளர் திருமதி சி.லிங்கேஸ்வரன், மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சா.ரவிராஜ், மட்டக்களப்பு மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி கி.பிறேம்குமார் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி ல. ஜெகதீஸ்பரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் அதிதிகள் வரவேற்கப்பட்டு, நெற்கதிர் சூடடிக்கப்பட்டு, அரிசி புடைக்கப்பட்டு, அதனைக் கொண்டு பொங்கல் செய்யப்பட்டது.

இதன்போது விளக்கேற்றல், மக்கள் நடனம், மக்கள் பாடல், உருப்பிணி கல்யாணம் ஆகிய நிகழ்வுகள் அரங்கேறின.









# கட்டைபறிச்சான் பாலமானது திருத்தப்படாமையால் அவலம்!

(எம்.எம்.நௌபீக்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கட்டைபறிச்சான் பாலமானது பல தசாப்தங்களாகப் புனரமைக்கப் படாது உள்ளது. இது தற்போது சேதமடைந்து காணப்படுகிறது. இந்த வீதியூடாகப் பயணிப்பதில் பொது மக்கள் அச்சமடைந்து வருகின்றனர்.

சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலமானது தற்போது பல இடங்களில் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இது எப்போது உடைந்து விழும் என்ற அச்சத்தில் பயணிக்கின்றனர் என்று கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலத்தின் ஊடாக ஒரு வாகனம் பயணிக்கும் போது இன்னொரு வாகனம் தரித்து பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப் படுகிறது.

இந்தப் பாலத்தின் ஊடாகக் கட்டைப் பறிச்சான், சம்பூர், கூனித்தீவு, அம் மன்நகர் மற்றும் சேனையூர் போன்ற பிரதேச மக்கள் நாளாந்தம் மூதூர் பிரதேசத்துக்கு வந்து போகின்றனர்.

இந்தப் பாலத்தின் ஊடாகக் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாலத்துக்குப் பதிலாக விரைவாகப் புதிய பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# அக்கரைப்பற்றில் இரத்ததான முகாம்!

(எம்.என்.எம்.அப்ராஸ்)

அக்கரைப்பற்று ஐ.பி.எச்.எஸ். கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில், அக்கரைப் பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக, மாபெரும் இரத்ததான முகாம் ஐ.பி.எச்.எஸ். கல்வி நிறுவனத்தில் நேற்று சனிக்கிழமை (20)இடம்பெற்றது.

இரத்ததான நிகழ்வானது ஐ. பி.எச்.எஸ். கல்வி நிறுவனத்தின் சமூக நல பங்களிப்பின் அங்கமாக உயிர் காக்கும் 'உன்னத சேவையில் ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.


இது அக்கரைப்பற்று இன்ஸ்பைரிங்க் யூத்ஸ் மற்றும் அக்கரைப்பற்று ஐகோனிக் யூத்ஸ் அமைப்புக்களின் ஒத்துழைப்புடன், ஐ.பி.எச்.எஸ். கல்வி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பொதுமக்கள், இளைஞர்கள் என பலரும் ஆர்வத்துடன் இரத்த தானம் மேற்கொண்டனர்.

சுமார் 90 பேர் வரை இரத்ததானம் செய்தனர். அத்துடன் இரத்ததானம் மேற்கொண்டமைக்கான நினைவுச் சான்றிதழ் ஐ.பி.எச்.எஸ். கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

# ராமர் கோயில் திறப்பு விழாவை முன்னிட்டு அயோத்தியில் மூன்று அடுக்கு பாதுகாப்பு



ராமர் கோயில் திறப்பு விழாவை முன்னிட்டு அயோத்தியில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசம், அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்த கோயிலின் திறப்பு விழா நாளை நடைபெறுகிறது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி, மடாதிபதிகள், அரசியல் தலைவர்கள், திரையுலகம், விளையாட்டு துறை பிரபலங்கள், வெளிநாட்டு தலைவர்கள் என 11 ஆயிரம் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்க உள்ளனர்.

ராமர் கோயில் திறப்பு விழாவின்போது தாக்குதல் நடத்துவோம் என்று பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகள் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளன.

ராமர் கோயில் திறப்பு விழாவின்போது தற்கொலைப்படை தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்காரணமாக அயோத்தி நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

மத்திய அரசின் சிறப்பு பாதுகாப்பு படையிடம் அயோத்தி நகர பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. தேசிய பாதுகாப்பு படை, தீவிரவாத தடுப்புப் படை, சிறப்பு கொமாண்டோ படை, சி.ஆர்.பி.எப், மத்திய தொழில் பாதுகாப்பு படை, மாநில பொலிஸார் என சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் செயல்படும் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கெமராக்கள் அயோத்தி முழுவதும் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த கெமராக்கள் மூலம் பழைய குற்றவாளிகளின் முகங்களை அடையாளம் காண முடியும். ட்ரோன்களை சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகள், கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

அயோத்தி மட்டுமன்றி உத்தர பிரதேசம் மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. குறிப்பாக உத்தர பிரதேசத்தை ஒட்டியுள்ள நேபாளத்தின் 570 கிலோ மீற்றர் தொலைவு எல்லைப் பகுதியில் தீவிர ரோந்து பணி நடைபெறுகிறது.

அயோத்தி நகர பாதுகாப்பு குறித்து உத்தர பிரதேச பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

”கடந்த 18 ஆம் திகதி முதல் அயோத்தி நகரின் பாதுகாப்பு எஸ்.பி.ஜி. படையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. சனிக்கிழமை முதல் அயோத்தி நகரம் முழுமையான பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. நகரின் பிரதான வீதிகள், தெருக்களில் பொது போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. உத்தர பிரதேசம் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து அயோத்திக்கு செல்லும் வீதிகளில் தீவிர சோதனை நடத்தப்படுகிறது. அந்நிய நபர்கள் அயோத்தியில் நுழைய தடை விதிக் கப்பட்டு உள்ளது.” என்று தெரிவித்தன.

# தனுஷ்கோடி கடற்கரையில் பிரதமர் மோடி மலர் தூவி வழிபாடு

ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி சென்றடைந்த பிரதமர் மோடி அங்குள்ள அரிச்சல்முனை கடற்கரையில் மலர்களை தூவி வழிபாடு செய்தார். பின்னர் கோதரண்டராமர் கோயிலில் சிறப்புப் பூஜைகளில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார்.

அயோத்தி ராமர் கோயில் திறப்பு நாளை நடைபெறுகிறது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி 11 நாள்கள் விரதம் இருந்து வருகிறார். மேலும், பல்வேறு ஆன்மிக தலங்களுக்கும் சென்று வழிபாடு நடத்தி வருகிறார்.

அந்த வகையில் தமிழகத்துக்கு 3 நாள் பயணமாக பிரதமர் நேற்று முன்தினம் மாலை பெங்களூரில் இருந்து சென்னை வந்தார். பின்னர் நேரு உள்விளையாட்டு அரங்கில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார்.



பயணத்தின் இரண்டாம் நாளில் சென்னையிலிருந்து ஸ்ரீரங்கம் சென்ற அவர், அங்கு ரங்கநாதர் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். பின்னர் அங்கிருந்து நேற்று ராமேஸ்வரம் சென்ற அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், இன்று ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி சென்றடைந்தார் பிரதமர் மோடி. அங்குள்ள கடற்கரையில் மலர்கள், துளசி இலைகளை தூவி வழிபாடு செய்தார். பின்னர் அங்கு நாற்காலியில் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்த அவர், அங்குள்ள புனித ஸ்தூபிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அரிச்சல்முனை கடற்கரையில் இருந்துதான் இலங்கைக்கு ராமர் பாலம் கட்டப்பட்டதாக ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. நாளை அயோத்தியில் ராமர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ள நிலையில், பிரதமர் மோடி அரிச்சல்முனை சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானிய பாதுகாப்பு படை கொல்லப்பட்டமைக்கு பதில் தாக்குதல் நடத்தப்படும்: ஈரான் அறிவிப்பு



ஈரானிய பாதுகாப்பு படை உறுப்பினர்கள் ஐந்து பேர் சிரியாவின் தலைநகரில் வைத்து நேற்று கொல்லப்பட்டமைக்கு பதில் தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் தான் காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜனாதிபதி தமது உத்தியோகபூர்வ இணையத்தள பக்கத்தில் உயிரிழந்த பாதுகாப்பு படை உறுப்பினர்களுக்கு இரங்கலை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த தாக்குதலுக்கு ஈரானின் வெளியுறவு அமைச்சகமும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சிரியாவின் தலைநகரில் நேற்று நடத்தப்பட்ட வான்வழித்தாக்குதல்கள் தென்மேற்கு டமாஸ்கஸ், இராணுவ விமான நிலையம் மற்றும் டமாஸ்கஸில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் போன்ற இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

# சிரியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பத்து பேர் பலி!

சிரியா நகரமான டமாஸ்கஸில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏற்கனவே, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 6 ஆக இருந்து, தற்போது 10 ஆக அதிகரித்துள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் சிரியாவில் உள்ள மனித உரிமை ஆணையம் தெரிவிக்கையில்,

”இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் முழுமையாக சேதமுற்றுள்ளது.

பொதுமக்கள் வசித்து வந்த குடியிருப்பு கட்டடம் தாக்கப்பட்டுள்ளது.




தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணிகளில் மேலும் சிலரது சடலங்கள் மீட்கப்பட்டன, இதன் காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது,” எனத் தெரிவித்துள்ளது.


# பிரித்தானிய போர்க் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

பிரித்தானியாவின் ராயல் கடற்படைக்கு சொந்தமான இரு கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தானது, பஹ்ரைன் துறைமுகத்தில் இடம்பெற்றுள்ளது.

மத்திய கிழக்குத் துறைமுகத்தில் உள்ள கடற்கரையிலிருந்து பிரித்தானியாவின் ராயல் கடற்படையை சேர்ந்த இரு போர் கப்பல்களே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த நிலையில், பிரித்தானிய ராயல் கடற்படையின் சார்பாக வளைகுடா பகுதியில் இரண்டு போர் கப்பல்களும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.



அதேவேளை, விபத்தினால் யாருக்கும் எந்தவித ஆபத்துகளும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இரண்டு சிறப்பு கப்பல்களும் கடல்வழி மார்க்கமான வர்த்தகத்தை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்கு உதவுகின்றன என கூறப்படுகிறது.